முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 830

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.01.2022**, வியாழக்கிழமை

1. தர்மபலம் கொண்ட தவசியே
   தரணிகாக்க வந்த ஞானியே
   ஆறுமுகன் என் அவதாரமாகவே
   ஆற்றல்பட துறையூர் மண்ணில் வாழுகின்ற
2. வாழுகின்ற அரங்கனே உந்தனுக்கு
   வல்லமைபட சுப்ரமணியப்பெருமான் யானும்
   தருகின்றேன் ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 22ம் நாள், 06.01.2022 வியாழக்கிழமை)
   தவசி உன் மார்க்கம் இந்த உலகை வெல்ல
3. வெல்லவே அரங்கன் காட்டுகின்ற
   விசாலமான சுத்தசன்மார்க்க நெறியை
   கள்ளம் கபடமின்றி உலகமக்கள்
   கருணைவடிவாக ஏற்று பின்தொடர்ந்தால்
4. தொடரவே உலகத்தின் அழிவு நீங்கும்
   தொடர்ந்துவர உலகங்கள் மீட்பு காணும்
   காணுமப்பா அரங்கன் ஆசியாலே காணுமப்பா அரங்கன் கருணையாலே
   ஞானபூமியாக இந்த உலகம் மாற்றம் பெற்று ஞானிகள் ஆட்சிக்கு வருகக் கூடும்
5. கூடாத மாச்சர்யங்கள் ஒழிந்தும்
   கிருமி புதுவழியான பிணிசோடைகளெல்லாம் அகன்றும்
   ஈடேறும் இந்த உலகம் ஞானவான் தலைமையில்
   இனிதே ஞான பாதுகாப்பு கூடி மாற்றங்காண நேரும்
6. நேர்மைக்கொண்டு அரங்கன் உலகை நோக்கி
   நீதிமானாக காட்டுகின்ற பெருமைமிக்க ஞானவழிகளை
   அருமைபட தொண்டர்கள் உண்மை விசுவாசமாக
   ஆற்றல்பட அரங்கனே சதமென வேண்டி
7. வேண்டியே தொடர்ந்து உலகமெங்கும்
   விரைந்து இந்த மார்க்கத்தை கொண்டு சென்றால்
   தொண்டு வழி அன்பர்கள் தேறுவதோடு
   தேசமே ஞான பூமியாக மாற்றம் பெறும்

8. மாற்றத்துக்கே அரங்கனுள் யான் நித்தம் நித்தம்
மகத்துவத்தை வரமாக தந்து அருளிவர
ஆற்றல்பட அரங்கன் கொள்கை உலகை ஆளும்
ஆற்றல்பட அரங்கன் தர்மமே உலகை மீட்கும்

9. மீட்புகொண்டு அரங்கனுள் யான்
மேலான சக்தியூட்டி வர
மாட்சிமைபட அரங்கனை அணுகும்
மக்களுக்கு மரணமே விலகும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–